1972 டிசம்பர் 2]

லாளர் நலத்துறை துணை ஆணையாளர் ஆவார். அந்த முத்தரப்புக் குழுவில் தொழிலதிபர்கள் சார்பில் ஒன்பது பிரதிநிதிகளும், தொழிலாளர்கள் சார்பில் ஒன்பது பிரதிநிதிகளும் உறுப்பினர்களாகவும், சர்க்கரைத்துறை இயக்குநர் கூட்டு உறுப்பினராகவும் இடம் பெற்றனர்.

சர்க்கரைத் தொழிலுக்கான ஊதிய வாரியத்தின் பரிவுரைகளைச் செயற்படுத்துவது குறித்து எவ்வித முடிவுக்கும் வர இயலவில்லை என்று முத்தரப்புக் குழுவின் அமைப்பாளர் ஓர் அறிக்கையைப் பணித்தனுப்பினார். நிர்வாகத்தினர், தொழிலாளர்கள் ஆகியோரின் பிரதிநிதிகள் அடங்கிய கூட்டங்களை நான் கூட்டினேன். இறுதியாக 25—2—72-ல் ஓர் உடன்பாடு ஏற்பட்டது.

Expanded Nutrition Programme

*10 Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) the details of the Expanded Nutrition Programme introduced in Madras City; and

(*b*) whether the programme will be extended to other districts in the State?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) பள்ளி செல்லும் வயதடையாக் குழந்தைகளுக்குக் கூடுதலாகச் சத்துணவு வழங்குவதற்கான சிறப்புச் சத்துணவுத் திட்டம் மத்திய அரசு முழு அளவில் பொறுப்பேற்கும் திட்டமாகும். இத்திட்டம் தமிழ் நாட்டில் 1970, அக்டோபர் முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை இத்திட்டம் மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு மட்டும் பொருந்துவதாக இருந்தது. 6 வயதுவரையிலான குழந்தைகள், கர்ப்பிணிகள், கைக்குழந்தைகளுடன் கூடிய தாய்மார்கள் ஆகியவர்களுக்கும் இத்திட்டம் பொருந்துமாறு இந்திய அரசு இத்திட்டத்தை விரிவுப்படுத்தியுள்ளது. இத்திட்டம் சென்னை மாநகரில் 3—4—1972 முதல் செயல்படுத்தப்படுகிறது. விரிவுபடுத்தப்பட்ட இத்திட்டத்தின்கீழ் 3—6 வயதுத் தொகுதியின்கீழ் வரும் குழந்தைகளும், குடிசைப் பகுதியில் வாழும் கர்ப்பிணிகள், கைக்குழந்தையுடன் கூடிய தாய்மார்களும் பயனடைகின்றனர். வாரத்தில் 6 நாட்களுக்கு அவர்களுக்கு உணவளிக்கப்படுகிறது. “பால் பெருக்கத்திட்டத்தின்” கீழ் சென்னைமாநகரில் சிறப்புச்

சத்துணவுத் திட்டத்தின்படி பயன்பெறும் 0—3 வயதுத் தொகுதியின்கீழ்வரும் குழந்தைகளுக்கு பால் வழங்கப்படுகிறது. அதன்படி அவர்களுக்குக் கொடுக்கப்படும் ரொட்டியின் விதம் குறைக்கப்பட்டது. 0—1 வயதுத் தொகுதியில் உள்ள குழந்தைகளுக்கு ஒவ்வொரு நாளும் 1 துண்டு ரொட்டியும் 200 மி.லி. பாலும் வழங்கப்படுகிறது. 1—3 வயதுத் தொகுதியின்கீழ் உள்ள குழந்தைகளுக்கு ஒவ்வொரு நாளும் 2 துண்டு ரொட்டியும் 100 மி.லி. பாலும் வழங்கப்படுகிறது. 3—6 வயதுத் தொகுதியின்கீழ் வரும் குழந்தைகள், கர்ப்பிணிகள் கைக்குழந்தைகளுடன் கூடிய தாய்மார்கள் ஒவ்வொருவருக்கும் 75 கிராம் நிறையுடைய பால், ரொட்டி வழங்கப்படுகிறது. தற்போது பால் வழங்கும் திட்டம் எழும்பூர் சட்டமன்றத் தொகுதியிலும், சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதியின் ஒரு பகுதியிலும் செயல்படுத்தப்படுகிறது. மற்ற தொகுதிகளில் வயது வரம்பு இல்லாமல் ஒவ்வொருவருக்கும் 75 கிராம் ரொட்டி வழங்கப்படுகிறது. இத்தொகுதிகளிலும் பால் வழங்கும் திட்டம் நாளடைவில் கொண்டு வரப்படும்.

(இ) மாவட்டங்களிலுள்ள மற்ற வெளியூர் குடிசைப் பகுதிகளில் சிறப்புச் சத்துணவுத்திட்டம் தற்போது செயல்படுத்தப்படுகிறது. விரிவுபடுத்தப்பட்ட இந்தச் சிறப்பு சத்துணவுத் திட்டம் அவ்விடங்களிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது.

Quality control for handloom goods

* 11 Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any compulsory quality control is being enforced for the handloom goods ; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) உள் நாட்டில் பயன்படுத்தப்படுவதற்காக உற்பத்தி செய்யப்படும் கைத்தறித் துணிகள் தொடர்பாகக் கட்டாயத் தரக்கட்டுப்பாடு எதனையும் அரசு விதிக்கவில்லை. இருப்பினும், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதற்காக உற்பத்தி செய்யப்படுகிற கைத்தறித் துணிகளில் சில இனங்கள் தொடர்பாக, கட்டாய ஆய்வு தரக்குறியீட்டு ஏற்பாடு கொண்டுவரப்பட்டுள்ளது.